பக்கங்கள்: ஆறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

சுடர்: 8 திருவள்ளுவர் ஆண்டு 2023 மார்கழி 27 திங்கட்கிழமை (11-01-1993) UTHAYAN—A Lively National Tamil Daily கதிர் 46

# கிறிஸ்தவ ஆயர்கள் மூவர் தலைவர் பிரபாவுடன் பேச்சு

## இரண்டரை மணி நேரம் நேற்றிரவு சந்திப்பு

யாழ்ப்பாணம், ஜனவரி 11

மூன்று கிறிஸ்தவ திருச்சபைகளின் ஆயர்கள் நேற்று இரவு தமிழீழத் தேசியத் தலைவரும், தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவருமான திரு. வே. பிரபாகரனைச் சந்தித்து இரண்டரை மணி நேரம் உரையாடினர்.

யாழ்ப்பாணம் விஜயம் செய்துள்ள அங்கிலிக்கன் திருச்சபையின் ஆயர் அதி. வண. கென்னத் பெர்னாண்டோ, கத்தோலிக்க திருச்சபையின் யாழ். ஆயர் அதி. வண. தோமஸ் சௌந்தரநாயகம், தென்னிந்தியத் திருச்சபையின் யாழ். ஆயர் அதி. வண. டி. ஜே. அம்பலவாணர் ஆகிய மூவருமே தலைவர் பிரபாகரனை நேற்றுச் சந்தித்தனர்.

தமிழ்மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்து இச்சந்திப்பின்போது ஆராயப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

இந்த பேச்சுவார்த்தையில் அங்கிலிக்கன் திருச்சபை சார்பில் கிழக்காசிய தேசிய கிறிஸ்தவ மன்றச் செயலாளரான அருட் கலாநிதி ரியன்ஸி பெரேரா, வண. நேசகுமார், டாக்டர் ரி. டபிள்யூ ஜெய குலராஜா ஆகியோரும்—

கத்தோலிக்க திருச்சபை சார்பில் வண. எஸ். ஜே. இமானுவேலும்—

தென்னிந்திய திருச்சபை சார்பில் புதிய ஆயராகத் தெரிவுசெய்யப்பட்டுள்ள கலாநிதி வண. எஸ். ஜெபநேசன், வண ஜெயநேசன் ஆகியோரும் பங்குபற்றினர்.

விடுதலைப் புலிகள் சார்பில் விடுதலைப் புலிகளின் அர

[ 6ஆம் பக்கம் பார்க்க]

## பம்பாயில் நேற்று மட்டும் 100 பேர் பலி!

பம்பாய் நகரில் இடம்பெற்று வரும் இந்து- முஸ்லிம் கலவரத்தில் நேற்று மட்டும் நூறு பேர் வரை கொல்லப்பட்டனர் என்றும் —

அவர்களில் மூவர் உயிரோடு எரித்துக் கொல்லப்பட்டனர் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (உ-எ)

ஆயர்கள் மூவருடன் தலைவர் பிரபாகரன்



ஆயர்கள் மூவரையும் தலைவர் பிரபா சந்தித்தபோது எடுக்கப்பட்ட படம்.

## யாழ். நகரில் இன்று கண்டனப் பேரணி

யாழ்ப்பாணம், ஜன. 11

ஸ்ரீலங்கா அரசாங்கம் திட்டமிட்டு மேற்கொண்டு வரும் அடக்குமுறைகளைக் கண்டித்து, ஐந்து அம்சக் கோரிக்கையை முன்வைத்து இன்று காலை யாழ். நகரில் பிரமாண்டமான ஆர்ப்பாட்டப் பேரணி நடைபெறவுள்ளது

இரண்டு லட்சத்துக்கும் அதிகமான மக்கள் கலந்துகொள்வர் என எதிர்பார்க்கப்படும் இந்தப் பேரணியில் சர்வமத குருமார்களும் பங்குபற்றுவர்.

பேரணியுடன் வாகன அணியும் இன்று இடம்பெற உள்ளது.

பேரணியினர் எடுத்துச் செல்லும் மகஜர் ஐ. நா. வுக்கு அனுப்புவதற்காக செஞ்சிலுவைச் சங்கச் சர்வதேசக் குழுவின் யாழ். வதிவிடப் பிரதிநிதியிடம் கையளிக்கப்படும்.

ஜனாதிபதிக்கு அனுப்பப்படும் மகஜர் யாழ். அரசாங்க அதிபரின் பிரதிநிதியிடம் கையளிக்கப்படும்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## சமாதான சூழ்நிலை ஏற்பட பூநகரி பாதையை திறக்குக!

### ஆயர் மூலம் தலைவர் பிரபா வேண்டுகோள்

யாழ்ப்பாணம், ஜன. 11

"அரசாங்கம் சமாதான சூழ்நிலையை உருவாக்குவதற்கான நல்லெண்ண முயற்சியாக பூநகரிப் பாதையை மக்கள் போக்குவரத்துக்காகத் திறக்கவேண்டும்."

—இவ்வாறு தம்மைச் சந்தித்த அங்கிலிக்கன் திருச்சபையின் ஆயர் அதி. வண. கென்னத் பெர்னாண்டோவிடம் தலைவர் திரு வே. பிரபாகரன் கோரிக்கை விடுத்தார்.

நேற்று இரவு அங்கிலிக்கன் ஆயருடன் தனியாக நடத்திய பேச்சுகளின் போது தலைவர் பிரபாகரன் இவ்வாறு குறிப்பிட்டார்.

கண்மூடித்தனமாக மேற்கொள்ளப்படும் விமான, ஷெல் தாக்குதல்களையும் அரசு நிறுத்த வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார்.

இந்த விடயம் குறித்து பதிலளித்த அங்கிலிக்கன் திருச்சபை ஆயர் —

"யாழ் மக்களின் போக்குவரத்து அவலங்களை நேரிடையாக கண்டேன். போக்குவரத்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## குடாநாட்டில் பரவலாக சீ-பிளேன் நேற்று நோட்டம்

யாழ்ப்பாணம், ஜன. 11

குடாநாட்டின் பல பகுதிகளிலும் நேற்று சீ-பிளேன் சுற்றிச் சுற்றி நோட்டமிட்டது

நேற்றுக் காலை 8 மணியளவில் சாவகச்சேரிப் பகுதியில் சீ-பிளேன் பல தடவைகள் சுற்றியதால், அங்குள்ள மக்கள் பதற்றமடைந்துள்ளனர்.

காலை 8.30 மணியளவில் யாழ் நகரம் மற்றும் அதை அண்டிய பகுதிகளை சீ-பிளேன் தாழப் பறந்து நோட்டமிட்டது.

பின்னர் முற்பகல் சுமார் 10 மணி தொடக்கம் 10.30 மணிவரை தெல்லிப்பளை, மல்லாகம், அளவெட்டி, பன்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## தீர்வு ஒன்றைத் தெரிவுக்குழு கொண்டுவரும்; அங்கிலிக்கன் ஆயர் கென்னத் நம்பிக்கை

யாழ்ப்பாணம், ஜன. 11

நாடாளுமன்றத் தெரிவுக் குழுவின் யோசனையை நம்பிக்கையோடு எதிர்பாருங்கள். தெரிவுக்குழு தீர்வு ஒன்றைக் கொண்டுவரும் என்று நான் மிகுந்த நம்பிக்கை கொண்டுள்ளேன்.

—இவ்வாறு கூறினார் யாழ்ப்பாணம் விஜயம் செய்திருக்கும் அங்கிலிக்கன் திருச்சபையின் ஆயர் அதி வண. கென்னத் பெர்னாண்டோ.

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் திரு. வே. பிரபாகரனைச் சந்திப்பதற்கு முன்னர் — நேற்று நண்பகல் 12.30 மணியளவில் — உதயனுக்கு சிறப்புப் பேட்டி ஒன்றை அளித்தார். அப் பேட்டியிலேயே நாடாளுமன்றத் தெரிவுக் குழுவின் பெறுபேறு குறித்து அவர் நம்பிக்கை வெளியிட்டார்.

### உதயனுக்குச் சிறப்புப் பேட்டி

பேட்டியின் விவரம் வருமாறு:-

கேள்வி: புதிய ஆயர்... [illegible] ...கைக்குள்ளாகியும் இருக்கும் குடாநாட்டுக்கு வந்துள்ள முதலாவது மதப்பெரியார் தாங்களாக இருக்கிறீர்கள். கடந்த ஆண்டும் மதப்பெரியார்கள் கொண்ட பல குழுக்கள் யாழ்ப்பாணம் வந்து சென்றன. அவற்றால் பலன் ஏதும் ஏற்படவில்லை. தங்களின் இந்த வருகையாவது யாழ். குடா மக்களின் துன்பங்களைக் களைய உதவுமா?

ஆயர்: துன்பங்களில் இருந்து யாழ் மக்களை விடுவிக்க நான் உதவ முடியும் என்று நம்புகின்றேன்.

கேள்வி: நீங்கள் அரசியல்

(5 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சேவை நலம் பாராட்டு



33 வருடங்களாக ஆசிரியரா கவும், உப அதிபராகவும் பின் கொத்தணி அதிபராவும், வேலணை சேர் வைத்திலிங்கம் ம. ம. வித்தியாலயத்தில் பெருந் தொண்டாற்றிய திரு. பொ. கேதாரநாதன் அவர்கள் தமது கல்விச் சேவையில் இருந்து ஓய்வு பெறுகின்றார். இவர் நல்லவர், வல்லவர், சிறந்த நல்லாசான். கல்விப் பணியுடன். சமூகப் பணி, சமயப் பணி ஆகியவற்றையும் தமது காலத்தில் செய்தமை பாராட்டத்தக்கது. அவரின் சேவையை நான் பாராட்டுகின்றேன். தொடர்ந்தும் சுகமாக வாழப் பிரார்த்திக்கின்றேன்.

சி. புவனேந்திரன்.
பிரதிக் கல்விப் பணிப்பளர்.

இன்று 11-01 93இல் ஓய்வுபெறும்
திரு. சே. பொ. கேதாரநாதன்
(B. Sc. DiP. in-Edu)
கொத்தணி அதிபர்

வேலணைக் கொத்தணிப் பாடசாலைகளின் வளர்ச்சிக்கு அயராது உழைத்த கொத்தணி அதிபரின் சேவையைப் பாராட்டி, அவர் நலம் பெற்று வாழ வாழ்த்துகின்றோம்

அதிபர்கள்,
வேலணைக் கொத்தணி

உங்கள் சேவையைப் பாராட்டி பாடசாலை அபிவிருத்தியில் தொடர்ந்து பங்கு கொள்ள நீண்ட நலமான வாழ்வுக்குப் பிராத்திக்கின்றோம்.

கா பாலகிருஷ்ணன்,
செயலாளர்,
பாடசாலை அபிவிருத்திச் சபை
(பதில் திட்டமிடல் பிரதிப் பணிப்பாளர்)

பழைய மாணவராகிய இவரின் கல்லூரிச் சேவையை பாராட்டுவதுடன் தொடர்ந்தும் எமது சங்கத்தின் மூலம் சேவையாற்ற வேண்டி வாழ்த்துகின்றோம்.

செ. பாலச்சந்திரன்
பிரதித் தலைவர்
பழைய மாணவர் சங்கம்.
[புவியியற் துறைத் தலைவர் - யாழ் பல்கலைக்கழகம்.]

[24019]

## தீவுப பகுதிகளுக்கு:
# தைப்பொங்கல் தினம் முதல் மின்சார விநியோகமாம்!

கொழும்பு, ஜன. 11
தீவுப் பகுதிகளுக்கு தைப் பொங்கல் தினம் முதல் மின்சார விநியோகம் வழங்கப்படவுள்ளதாக தெரிவிக்கப் பட்டுள்ளது.

யாழ்ப்பாண மாவட்டத்தில் இராணுவக் கட்டுப்பாட்டில் உள்ள தீவுப்பகுதி மற்றும் மாதகல் பகுதிகளில் புனர்வாழ்வு, புனரமைப்பு மற்றும் சிவில் நிர்வாகப்பணிகளைத் துரிதப்படுத்தப்படுவது தொடர்பாக ஆராய்வதற்காக புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சுச் செயலாளர் கிறிஸ்டி சில்வா தலைமையிலான குழு எதிர்வரும் 13 ஆம் திகதி அப்பகுதிகளுக்கு விஜயம் செய்யவுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டது.

(த-எ)

ஸ்கந்தவரோதயக் கல்லூரியின்
முன்னாள் முகாமையாளர்
அமரர்
டாக்டர் சி. சிவசுப்பிரமணியம்
(J. P., O.B.E.)
அவர்களின்

# நினைவுச் சொற்பொழிவு

காலம்: 12-01-1993 செவ்வாய்க்கிழமை
காலை 8-45 மணி

இடம்: ஸ்கந்தவரோதயக் கல்லூரி மண்டபம்

தலைவர்: திரு. ப. விக்கினேஸ்வரன் அவர்கள்
(கல்லூரி அதிபர்)

நினைவுரை: ஸ்ரீ. சி. சிவசரவணபவன் M. A.

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.
நன்றி.

அதிபர், ஆசிரியர், மாணவர்,
பழையமாணவர், பெற்றார்.

ஸ்கந்தவரோதயக் கல்லூரி,
கந்தரோடை - சுன்னாகம் (சி/4136)

# இயந்திர பராமரிப்பாளர்

இயந்திரங்கள், ஜெனரேட்டர்களை இயக்குவதிலும், பராமரிப்பதிலும் அனுபவம் உள்ளவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பதாரர்கள் இயந்திரங்களைத் திருத்துவதிலும் திறமை பெற்றிருக்கவேண்டும். மின்னியல், எந்திரவியல் அறிவுடையவர்கள் விரும்பத்தக்கது இரவு நேரம் பணிபுரிவதற்குத் தயாராக இருக்க வேண்டும்.

பூரண சுய விவரங்களுடன் 18-1-93 திங்கட்கிழமைக்கு முன்னர் விண்ணப்பிக்கவும்.

முகாமையாளர் (ஆளணி),
உதயன் வெளியீட்டகம்,
292/2, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

# பாரதிதாசன்
கல்வி நிறுவனம்
(BECON)
ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

A/L 93
DAY CLASSES

மீட்டல்
வினா - விடை
வகுப்புகள்

பொருளியல்:-
வரதராஜன்
கணக்கியல்:-
சௌந்தி
வர்த்தகம்:-
பசில்
அளவையியல்:-
S. S. மனோகரன்
தமிழ்:
திருமதி மீரா
இந்து நாகரிகம்:-
திருமதி சைலஜா
புவியியல்,
ஜோசப்

ஆரம்பம்:
12 - 01 - 93
செவ் 8 - 00 a m

★ செவ், வியாழன், சனி, ஞாயிறு ஆகிய நாட்களில் வகுப்புக்கள் நடைபெறும்.

★ ஒவ்வொரு பாடமும் இரு வகுப்புகளை (பாடத்திட்டம்; வினா-விடை) உள்ளடக்கியிருக்கும்.

(சி/4164)

# விக்னா கல்வி நிறுவனம்
52, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்.

O/L

பிரிவு II DAY CLASSES (8-00 — 2-00)

பிரிவு III EVENING CLASS (3-15 — 6-00)

பிரிவு II SAT., SUN. CLASSES (8-00 — 3-00)

பிரிவு II ஆண்டு 6, 7, 8, 9, 10

புதிய பிரிவுகள் ஆரம்பம்:
14 01 - 1993 (வியாழன்)

| | | |
|---|---|---|
| விஞ்ஞானம் | — | திரு. J. R. சூரி |
| கணிதம் | — | திரு. ஜெகன் |
| ஆங்கிலம் | — | திரு. விஸ்வநாதன் |
| சமூககல்வி | — | திரு. கோபி |
| தமிழ் | — | திரு. சிவா |
| சமயம் | — | திரு. கெங்கா |
| வர்த்தகம் | — | திரு. கருணாகரன் |

(சி-4130)

# அறிவித்தல்

அகில இலங்கை விஸ்வகர்மகுல சங்கம்
யாழ்ப்பாணம்

இன்று (11-1-93) நல்லூர் கந்தசுவாமி கோயில் முன்றலில் ஆரம்பமாகவிருக்கும் தமிழீழ மக்களின் ஒன்றிணைந்த மாபெரும் வெகுஜனப் போராட்ட ஊர்வலத்தில் மேற்படி சங்க உறுப்பினர்கள் யாவரையும் தவறாது கலந்து கொண்டு எமது மக்களின் பலத்த ஆதரவை வழங்குமாறு அன்புடன் கேட்டுக் கொள்ளுகின்றோம்.

தலைவர் செயலாளர்
(24023)

# 31ஆம் நாள் நினைவஞ்சலி

நெஞ்சினில் நிஜமாய்
18 — 10 — 1966



நெஞ்சினில் நிழலாய்
13 — 12 — 1992

# செல்வி வாசுகி மனோகரா

எழுதிச் செல்லும் விதியின்கை
எழுதி எழுதி மேற்செல்லும்;
தொழுது கெஞ்சி நின்றாலும்
சூழ்ச்சி பலவும் செய்தாலும்,
வழுவிப் பின்னாய் நீங்கியொரு,
வார்த்தையேனும் மாற்றிடுமோ,
அழுத கண்ணீரா றெல்லாம் -
அதிலோர் எழுத்தை மாற்றிடுமோ !

உமது பிரிவால் துயருறும் !
அண்ணி - பிள்ளைகள்
சித்தி - பிள்ளைகள்
தேவி அக்கா - பிள்ளைகள்

[24025]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிழங்குச் செய்கையாளருக்கு மலிவு விலையில் ம.எண்ணெய்

வண்ணார்பண்ணை, ஜன. 11

யாழ். குடாநாட்டில் உருளைக்கிழங்குச் செய்கையில் ஈடுபட்டுள்ள விவசாயிகளை ஊக்குவிக்கும் முகமாக யாழ். மாவட்ட விவசாயத் திணைக்களம் குறைந்த விலையில் மண்ணெண்ணெய்யை விநியோகித்து வருகின்றது.

இம் மாதத்தில் நீர்ப்பாய்ச்சுவதற்குத் தேவைப்படும் மண்ணெண்ணெய் தற்போது வழங்கப்பட்டுள்ளதுடன் — மேலதிகத் தேவையைப் பூர்த்தி செய்யவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதே வேளை— மரக்கறி மற்றும் வாழைச் செய்கையாளர்களுக்கு விநியோகிக்கத் தேவைப்படும் மண்எண்ணையை இங்கு எடுத்து வரவும் யாழ். அரச அதிபர் மூலம் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

யாழ். மாவட்ட உதவி விவசாயப் பணிப்பாளர் திரு. கே. குணரட்னம் மேற்படி தகவல்களைத் தெரிவித்தார்.

(த-162)

## ஜி. சீ. ஈ. உயர்தரம்: பரீட்சைப் பெறுபேறுகளை அனுப்பி வைக்க நடவடிக்கை

கொழும்பு, ஜன. 11

கடந்த ஆகஸ்ட் மாதத்தில் நடத்தப்பட்ட ஜி. சீ. ஈ. உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றிய யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த மாணவர்களுக்கான பரீட்சைப் பெறுபேறுகளை அனுப்பி வைக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்படுகிறது.

தற்பொழுது கொழும்பில் தங்கியுள்ள வடமாநிலக் கல்விப் பணிப்பாளர் மூலம் பெறுபேறுகள் அனுப்பி வைக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டது.

(த-ள)

## கோணேஸ்வரர் ஆலய கும்பாபிஷேகம்

பாடல்பெற்ற தலமான திருகோணமலை கோணேஸ்வராலயத்தின் மகாகும்பாபிஷேகம் எதிர்வரும் பெப்ரவரி மாதம் 11ஆம் திகதி நடைபெறவிருப்பதாகக் கொழும்புப் பத்திரிகைச் செய்தி ஒன்று தெரிவிக்கிறது.

(த-ள)

உ

## அகில இலங்கை கம்பன் கழகம்

நடத்தும்

### அமரர்கள் வித்துவான் சி. ஆறுமுகம், தேவன்-யாழ்ப்பாணம்

ஆகியோர் ஞாபகார்த்த

## கவிதை, பேச்சுப் போட்டிகள் - 1993



வித்துவான் சி. ஆறுமுகம்



தேவன் - யாழ்ப்பாணம்

எமது கழகத்தால் நடத்தப்படவுள்ள மேற்படி போட்டிகளுக்குத் தகுதியானவர்கள் விண்ணப்பிக்கலாம். கவிதை, பேச்சு ஆகிய இரு போட்டிகளிலும் முதல் மூன்று இடங்களைப் பெறும் போட்டியாளர்களுக்கு, இவ்வாண்டு முற்பகுதியில் நடைபெறவுள்ள கம்பன் விழாவில் தங்கப்பதக்கங்கள் பரிசில்களாக வழங்கப்படும். அத்தோடு அவர்கள் தகுதிகண்டு, கம்பன் விழா நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ளும் வாய்ப்பும் வழங்கப்படும்.

— உடன் தரப்படும் தலைப்பில் பேசவும், கவிதை ஆக்கவும் தகுதியுள்ள முப்பத்தைந்து (35) வயதுக்குட்பட்ட இருபாலாரும் கலந்து கொள்ளலாம்.

— போட்டிக்கான விண்ணப்பப்படிவங்களை ரூபா இருபத்தைந்து (25/-) செலுத்தி கீழ்க்காணும் இடங்களில் பெற்றுக் கொள்ளலாம்.

| | | |
|---|---|---|
| யாழ்ப்பாணம் | — | பூபாலசிங்கம் புத்தகசாலை |
| சுன்னாகம் | — | தனலக்சுமி புத்தகசாலை |
| நெல்லியடி | — | சிவசக்தி ஸ்ரோர்ஸ், பருத்தித்துறை வீதி, |
| சாவகச்சேரி | — | சிவம் மெடிக்கல்ஸ், கச்சாய் வீதி |

*விண்ணப்பங்கள் தபால் மூலம் அனுப்பப்படல் வேண்டும்.*

முகவரி: → "போட்டி இணைப்பாளர்"
அகில இலங்கை கம்பன் கழகம்,
"கம்பன் கோட்டம்",
300, கோயில் வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.

*விண்ணப்ப முடிவு திகதி:* 1993 பெப்ரவரி 15

**கம்பன் புகழ்பாடிக் கன்னித்தமிழ் வளர்ப்போம்**

தி. திருநந்தகுமார்
தலைவர்.

ஆறு. திருமுருகன்
போட்டி இணைப்பாளர்.

க. குமாரதாசன்
செயலர்.

(சி-[illegible])

அனைத்துலகப் பெண்கள் நாளை
முன்னிட்டு
விடுதலைப் புலிகள் மகளிர் அமைப்பு
நடத்தும்

## ஓவியப் போட்டி

இவ்வருடம் 1993 - 03 - 08 இல் நிகழவிருக்கும் அனைத்துலகப் பெண்கள் நாளையொட்டி ஓவியப் போட்டி ஒன்று நடைபெறவுள்ளது. இப்போட்டியில் ஓவியக் கலைஞர்களையும், ஓவியக் கலையில் ஆர்வமுள்ள ஏனைய தமிழீழ மக்களையும் கலந்து கொள்ளுமாறு விடுதலைப் புலிகள் மகளிர் அமைப்பு கேட்டுக் கொள்கின்றது.

**போட்டியாளர்களுக்கான ஒழுங்கு விதிகள்:**

1. பெண்கள் எதிர் நோக்குகின்ற சமூகப் பிரச்சினைகளை மையமாக வைத்து பெண்கள் மீதான சமூகத்தின் அடக்கு முறைகள், அழுத்தங்கள், இந் நிலையில் பெண்களின் மன உணர்வுகள், குமுறல்கள் ஆகியவற்றைப் படம் பிடித்துக் காட்டுவதாக அமைய வேண்டும். அதாவது இந்த ஓவியங்களுக்கூடாக சமூகத்தில் பெண்கள் எதிர்நோக்குகின்ற பிரச்சினைகளை இலகுவாகப் புரிந்து கொள்ளக் கூடியதாக அமைய வேண்டும்
2. சிங்கள இனவாத அரச அடக்குமுறை காரணமாக தமிழீழப் பெண்களின் யதார்த்த நிலையைப் பிரதிபலிப்பதாக, எமது மக்களின் தேசியப் பிரச்சினையை வெளிக்கொண்டு வருவதாக, எழுச்சியூட்டுவதாக அமைய வேண்டும்.

**ஏனைய விதிகள்:**

1. ஓவியங்கள் 28'' x 22'' (பிறிஸ்ரல் போட் அளவில்) அளவுடையதாக இருக்க வேண்டும்.
2. வர்ண சாதனங்களாகப் பின்வரும் எந்த ஊடகங்களையும் பயன்படுத்தலாம்.
நீலவர்ணம், மெழுகுச் சோக் வர்ணம், போஸ்ரர் வர்ணம், கலப்புச் சாதனம், ஒட்டுச் சித்திரம், எண்ணெய் வர்ணம்.
3. போட்டியாளர் ஒவ்வொருவரும் ஆகக் கூடியது மூன்று படங்களையே போட்டிக்காக அனுப்ப முடியும்.
4. ஓவியத்தினுள்ளே தேவையற்ற எந்த எழுத்துக்களும் இடம் பெறக் கூடாது. பெயர், முகவரி, பாடசாலை விவரம், உறுதிப்படுத்தல் போன்றவற்றை ஓவியத்தாளின் பின்புறத்தில் இடவும்.
5. போட்டிக்கான ஓவியங்கள் யாவும் 1993 - 02 - 20 இற்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக அனுப்பப்பட வேண்டும். குறிப்பிட்ட திகதிக்குப் பிந்தியதாக வந்துசேரும் ஓவியங்கள் போட்டிக்காகச் சேர்த்துக் கொள்ளப்படமாட்டாது.
6. உங்கள் ஆக்கங்களை உங்களுக்கு அண்மையிலுள்ள விடுதலைப் புலிகள் மகளிர் அமைப்பின் அரசியல் துறைச் செயலகங்களில் சேர்ப்பிக்கவும்.
7. தகுதி வாய்ந்த நடுவர்களின் தீர்ப்பே முடிவானதாகும்.

**மாணவர்களுக்கான சிறப்பு விதிகள்:**

மேற்குறிப்பிடப்பட்ட விதிகளுக்கமைவதோடு ஒவ்வொரு மாணவனும், போட்டிக்காக அனுப்பப்படுகின்ற ஓவியம் தனது சொந்தப் படைப்புத்தான் என்பதை அதிபர்கள் அல்லது வகுப்பாசிரியர்களின் ஒப்பம் இடுவித்து உறுதிப்படுத்தப்பட வேண்டும். (இவ்வாறு உறுதிப்படுத்துவதை ஓவியத்தாளின் பின்பக்கத்தில் செய்யவும்)

மாணவர்களுக்கான போட்டிகள் கீழ்ப் பிரிவு, மத்திய பிரிவு, மேற் பிரிவு எனத் தனித்தனிப் பிரிவுகளாக நடத்தப்பட்டு, ஒவ்வொரு பிரிவுக்கும் தனித்தனியாகப் பரிசுகள் வழங்கப்படும்.

**- விடுதலைப் புலிகள் மகளிர் அமைப்பு.**

[சி-4121]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்


### மலிவு விற்பனை

அழகிய கலண்டர்கள் பல தினிசுகளில் விற்பனைக்கு உண்டு. வர்ணக் கலர்களில் பதிப்பித்தும், படங்கள தனியாகவும் சிலிப் தனியாகவும் பெற்றுக்கொள்ளலாம். ஸ்ரீகாந்தா அச்சகம் – புத்தகசாலை, 330, காங்கேசன் துறை வீதி, யாழ்ப்பாணம். (23910)

### இசை வகுப்பு

கிற்றார் (Guitar), ஓர்கன (Organ) மிருதங்கம், தபேலா வகுப்புக்கள் 14-01-93 பிற்பகல் 2 மணிக்கு ஆரம்பம். தொடர்பு: A. S. சாந்தன், கலாசாலை வீதி, திருநெல்வேலி வடக்கு. (24000)

### மணமக்கள் தேவையா?

எம்மிடம் உள்நாட்டு வெளிநாட்டு மணமக்கள் பலர் இருக்கிறார்கள். மங்கள ஏஜென்சி கொய்யாத்தோட்டம். சந்திப்பு: சனி காலை. (23968)

### மணமகன் தேவை

நட்சத்திரம் கார்த்திகை 2ஆம் பாதம், 26 வயதுடைய மணமகளுக்கு பட்டதாரி மணமகன் தேவை. அரசாங்கத்தில் வேலை செய்பவராக இருத்தல் வேண்டும். செ. விஜயரத்தினம், லட்சுமி திருமண சேவை, நவாலி கிழக்கு, மானிப்பாய். 24017)

### காணவில்லை

08-01-1993அன்று ய/சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரி வளவினுள் நிறுத்தப்பட்டிருந்த B. 12861 இலக்க புதிய லுமாலா லேடீஸ் சைக்கிளை காணவில்லை. தகவல் தெரிந்தவர்கள் தயவு செய்து தொடர்பு கொள்ளவும் இ. யோகேஸ்வரி, ''ஈஸ்வரி வாசா'', கட்டுக்காணி ஒழுங்கை, சாவகச்சேரி. ரூபா 1,000/- சன்மானம் வழங்கப்படும் (24020)


## அனைத்துலக பெண்கள் நாளை முன்னிட்டு விடுதலைப் புலிகள் மகளிர் அமைப்பு நடத்தும்

# இலக்கியப் போட்டி

1993-03-08 இல் நிகழவிருக்கும் அனைத்துலகப் பெண்கள் நாளையொட்டி விடுதலைப் புலிகள் மகளிர் அமைப்பு இலக்கியப் போட்டியொன்றை நடத்தவுள்ளது எழுத்தார்வம்மிக்க அனைவரும் வயது வேறுபாடின்றி இந்தப் போட்டிகளில் கலந்து கொள்ளலாம். இப்போட்டிகள் கீழ்க்காணும் விடயங்களில் நடைபெறவுள்ளன.

1) கவிதை
2) சிறுகதை

இப்போட்டிக்கு அனுப்பப்படும் படைப்புக்கள் பெண்விடுதலையை முன்னெடுக்கும் நோக்கில் அமைய வேண்டும் காலங்காலமாகப் பெண்ணினத்தின் மீது திணிக்கப்படும் சமூக அடக்குமுறை வடிவங்களால் மட்டுமல்லாது, ஆக்கிரமிப்பு அரசின் ஒடுக்குமுறைகளாலும் சிறைப்படுத்தப்பட்டிருக்கும் தமிழீழப் பெண்களின் அவலநிலைகளையும், உள்ளக்கிடக்கைகளையும் வெளிக்காட்டும் விதத்தில் படைப்புக்கள் படைக்கப்பட வேண்டும்.

எமக்கு அனுப்பப்படும் படைப்புக்கள் தாளின் ஒரு பக்கத்தில் மட்டும் தெளிவாக எழுதப்பட்டோ, தட்டச்சில் பொறிக்கப்பட்டோ, ஒவ்வொரு படைப்பிலும் மூன்று பிரதிகள் அனுப்பப்பட வேண்டும். கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் 'அனைத்துலகப் பெண்கள் நாள் இலக்கியப் போட்டி' எனக் குறிப்பிடப்பட வேண்டும்.

மேற்குறிப்பிட்ட ஒவ்வொரு விடயத்திலும் தரமான முதல் மூன்று படைப்புக்களுக்கும் பரிசு வழங்கப்படும். பிரசுரிக்கத் தகுதியானவை, விடுதலைப் புலிகள் மகளிர் அமைப்பின் அதிகாரபூர்வ வெளியீடான 'சுதந்திரப் பறவைகள்' சஞ்சிகையில் பிரசுரிக்கப்படும்.

படைப்புக்களை அனுப்பும்போது, அனுப்புபவர் தனது பெயர், வயது, முகவரி என்பவற்றைத் தனியே ஒரு தாளில் எழுதி, படைப்புக்களுடன் இணைத்து அனுப்ப வேண்டும்.

போட்டிகளில் கலந்துகொள்ள விரும்புவோர் தமது படைப்புக்களை 993-02-10 இற்கு முன்னர் எமக்குக் கிடைக்கக் கூடியதாக, உங்களுக்கு அண்மையிலுள்ள விடுதலைப் புலிகள் மகளிர் அமைப்பின் அரசியல் துறைச் செயலகங்களில் சேர்ப்பிக்கவும்.

— விடுதலைப் புலிகள் மகளிர் அமைப்பு.

(சி-4120)


# காணவில்லை

## டாக்டர் நா. சத்தியசீலன்



எனது கணவர் டாக்டர் நா. சத்தியசீலன் (மாவட்ட வைத்திய அதிகாரி, கிளிநொச்சி) கடமை காரணமாக யாழ்ப்பாணம் வந்து கிளிநொச்சிக்கு திரும்பும் வழியில் 26-12-1992 சனிக்கிழமை காணாமல் போய்விட்டார் இவர் இதுவரை கிளிநொச்சிக்கு திரும்பவில்லை. தயவு செய்து இவரைப் பற்றிய தகவல் தெரிந்தவர்கள் கீழ்க்காணும் விலாசத்திற்கு அறிவிக்கவும்.

திருமதி ச. சத்தியசீலன்.

களவத்துறை வீதி,
அராலி தெற்கு,
வட்டுக்கோட்டை.

(24016)

## விவசாயிகளே!

அங்லோ ஏசியன் பேர்டிலைசெர்ஸ் கம்பனி வழங்கும்……

# "பிளாஸ்ட் ஓல்"

## BLAST ALL

நெற் பயிர்களைப் பாதிக்கும் கழுத்து எரிவந்த நோயை திறம்பட கட்டுப்படுத்தவும், மற்றும்

புகையிலை, உருளைக் கிழங்கு, தக்காளி மரக்கறி பயிர்களில் ஏற்படும் பங்கசு நோய்களைக் கட்டுப்படுத்தவும்

சிறந்த பங்கசு நாசினி

## ★ பிளாஸ்ட் ஓல் ★

பீடைநாசினிகள் விற்பனையாளர்களிடம் பெற்றுக் கொள்ளலாம்.

(சி-2890)


# இலங்கை செஞ்சிலுவைச் சங்கம்,

## யாழ்ப்பாணக் கிளை தலைமையகம்.

# பயிற்சி நெறிகள் - 1993

கீழ்வரும் இலவச பகுதி நேர பயிற்சி நெறிகள் யாழ் கிளைத் தலைமையகத்தில் நடத்தப்படவுள்ளன. பயில விரும்புவோர் குறைந்தது க. பொ. த. சாதாரண பரீட்சையில் கீழ்வரும் ஒவ்வொரு பயிற்சி நெறியின் அருகிலுள்ள அடைப்புக் குறிக்குள் குறிப்பிட்டுள்ள பாடங்கள் உட்பட 06 பாடங்களில் சித்தியடைந்தவர்களாக இருத்தல் வேண்டும்.

| | |
|---|---|
| தமிழ் தட்டச்சு, சுருக்கெழுத்து | (தமிழில் திறமைச் சித்தி |
| ஆங்கில தட்டச்சு, சுருக்கெழுத்து | ( ஆங்கிலத்தில் திறமைச் சித்தி) |
| பத்திரிகையாளர் பயிற்சி | (தமிழ், ஆங்கிலம், கணிதம் - சித்தி) |
| சமூகநலனும் சமுதாய சேவையும் | (தமிழ், ஆங்கிலம், கணிதம் - சித்தி) |
| முதல் உதவி | (சுகாதாரம் - சித்தி) |
| ஆரம்ப சுகாதாரம் | (சுகாதாரம்/சமூகவியல் சித்தி, உதவித் தாதி பயிற்சி பெற்றோருக்கு முன்னுரிமை) |
| உதவித் தாதி | (சுகாதாரம் - சித்தி) |
| மருந்தாளர் பயிற்சி (Dispenser's Course) | (தமிழ், ஆங்கிலம், விஞ்ஞானம், கணிதம்- சித்தி) |
| தமிழ் | |
| ஆங்கிலம் | |

விண்ணப்பங்களைத் தாம் வதியும் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் இயங்கும் இலங்கை செஞ்சிலுவைச் சங்கப் பிரிவுத் தலைவரின் சிபார்சுடன் எமக்கு 20-01-93க்கு முன்பாக அனுப்பி வைக்கவும். இதற்காக 23-01-93 முற்பகல் 9 மணிக்குத் தலைமையகத்தில் நடைபெறும் நேர்முகப் பரீட்சைக்குச் சான்றிதழ்களுடன் சமுகம் தரவும். 30-01-93 இல் பயிற்சி நெறிகள் ஆரம்பமாகும்

*தையல் பயிற்சி:*
மேற்படி தையல் பயிற்சி இலவச வகுப்புகள் ஒவ்வொரு பிரிவிலும் ஆரம்பமாக உள்ளன. இதில் பயில விரும்புவோர் பிரிவுக் காரியாலயத்துடன், உடன் தொடர்பு கொள்ளவும்.

செஞ்சிலுவைச் சங்கச் சேவையில்,
கௌரவ செயலாளர்.

73, கண்டி வீதி, யாழ்ப்பாணம்.
08-01-1993

(சி-4127)

# நினைவலையில் 33ஆம் நாள்



| மலர்வு: | உதிர்வு: |
|---|---|
| 15 | 10 |
| — | — |
| 08 | 12 |
| — | — |
| 1911 | 1992 |

அமரர் சாமுவேல்

## வினாசித்தம்பி வேலுப்பிள்ளை

( S. V Velupillai )

(இளைப்பாறிய அச்சுவேலி அமெரிக்கன் மிஷன் பாடசாலை தலைமை ஆசிரியர்)

''கிறிஸ்துவின் அன்பைவிட்டு நம்மைப் பிரிப்பவன் யார்? எல்லாவற்றிலேயும் நாம் நம்மில் அன்பு கூருகிறவராலே முற்றும் ஜெயங் கொள்கிறவர்களாயிருக்கிறோமே! மரணமானாலும் நம்முடைய கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவிலுள்ள தேவனுடைய அன்பை விட்டு நம்மைப் பிரிக்கமாட்டாதென்று நிச்சயித்திருக்கிறேன்.''

மனைவி, மகள்,
மருமகன், பேரப்பிள்ளைகள்.

இராச வீதி.
அச்சுவேலி.

(23939)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதயன்

### மரணப் பொறி மீது நடக்கச் செய்யவா?

யாழ்ப்பாணக் குடாநாட்டு மக்களின் போக்குவரத்துக்கும், உணவு மற்றும் பாவனைப் பொருள்களைக் கொண்டு வருவதற்கும் பூநகரிப் பாதையை திறக்கும் விவகாரத்தை அரசு அடித்துச் சாத்தி விட்டது

பூநகரிப் பாதையைத் திறப்பதானாலும் அங்கிருந்து இராணுவ முகாமை அகற்ற முடியாது என்று பிரதமரும், பாதுகாப்புத் துணை அமைச்சருமான திரு. டி. பி. விஜேதுங்கா அறிவித்திருக்கிறார். அவர் இவ்வாறு சொல்வது பூநகரிப் பாதையைத் திறக்க அரசாங்கத்துக்குச் சம்மதமில்லை — அதனை அனுமதிக்கப் போவதில்லை — என்றே அர்த்தப்படும்.

பூநகரிப் பாதையைத் திறக்கும் விவகாரத்தில் அகதிகளுக்கான ஐ. நா. தூதரக அதிகாரிகள் தீவிர அக்கறை காட்டினார்கள். யாழ்ப்பாணக் குடாநாட்டில் உள்ள அகதி முகாம்களில் சிலவற்றை ஐ நாவே பராமரிக்க வேண்டும் என்ற கோரிக்கை எழுந்ததைத் தொடர்ந்தே அவர்கள் பூநகரிப் பாதையை திறப்பதற்கான பேச்சுக்களில் ஈடுபட்டனர்.

குடாநாட்டில் உள்ள அகதி முகாம்களில் சிலவற்றை ஐ. நா. பொறுப்பேற்பதானால், அதற்கு முன்னர் தட்டுத் தடங்கல் இல்லாத போக்குவரத்துப் பாதை ஒன்றை ஏற்பாடு செய்ய வேண்டும் என்று ஐ. நா. அதிகாரிகள் கருதுகின்றனர். அவர்களுடைய நடைமுறை வழக்கமும் அதுவே. அதன் நிமித்தமே ஐ. நா. அதிகாரிகள் பூநகரிப் பாதையைத் திறக்கச் செய்வதில் தீவிரமாக உழைத்தார்கள் அது குறித்து விடுதலைப் புலிகளுடனும், அரசுடனும் பேசினார்கள்.

இராணுவ முகாம் உள்ளவாறே இருக்க, பூநகரிப்பாதை திறக்கப்பட்டால் பயணிகளின், தமிழர்களின் பாதுகாப்புக்கு உத்தரவாதம் உண்டா? ஸ்ரீலங்கா அரசும், அதன் படைகளும் தங்களை எவ்வாறெல்லாம் 'பாதுகாக்கிறார்கள்' என்பது தமிழர்களுக்கு மட்டுமே தெரியும்.

இராணுவ முகாமிருக்கப் பூநகரிப் பாதையைத் திறப்பது தமிழர்களை மரணப் பொறியின் மீது நடக்கச் சொல்வதாகும். அதுவும் ஆனையிறவு ஊடாகப் போக்குவரத்துச் செய்வதும் ஒன்றே.

எனவே அரசு பூநகரிப் போக்குவரத்து விவகாரத்தில் கதவை மூடித் தாழ் போட்டிருப்பதானது தமிழ் மக்களை இராணுவ நடவடிக்கையின் மூலம் மட்டுமன்றி பட்டினி போட்டும் சாகடிக்க வேண்டும் என்ற தனது நோக்கத்தை இன்னும் கைவிடவில்லை என்பதனையே காட்டுகிறது.

தமிழ் மக்களை இராணுவ நடவடிக்கையால் கொன்றொழிப்பது அவர்கள் அகதிகளாகி விட்டாலும் அவர்களுக்கு எவ்வித உதவியும் செய்யாமல் நடுத்தெருவில் விடுவது, அவர்களுக்கு ஆதரவளிக்க முன்வருவோரைத் தடுப்பது, மொத்தத்தில் தமிழர்களின் சகல வகையான வாழ்வுரிமைகளையும் பறித்து அவர்களைப் பலவீனப்படுத்துவது — என்ற தனது நோக்கத்தை எந்தக் கட்டத்திலும் தளர்த்தவோ விட்டுக் கொடுக்கவோ தயாரில்லை என்பதை அரசு வெளிப்படையாகக் கூறுகிறது.

ஐக்கிய நாடுகள் சபையின் ஓர் அங்கமான அகதிகளுக்கான ஐ. நா. தூதரகத்துக்கும் அரசாங்கம் தனது நிலைப்பாட்டை தெளிவாக எடுத்துக் கூறியிருக்கிறது! ஐ. நா. இது குறித்து கொழும்பு அரசு மீது என்ன நடவடிக்கை எடுக்கப் போகிறது?

## இன்று

மந்திகை, ஜன. 1[1]

விடுதலைப் புலிகளின் மகளிர் படைப்பிரிவின் முதலாவது தளபதியான மேஜர் சோதியாவின் மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலிக் கூட்டம் கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரி மண்டபத்தில் இன்று திங்கட்கிழமை நடைபெறும். [ஒ-ரி]

## நோயாளர் கப்பல் சேவை

யாழ்ப்பாணம், ஜன. 11

யாழ் மாவட்டத்திலுள்ள அவசர நோயாளர்களுக்கான கப்பல் சேவை அடுத்த மாதம் முதல் வாரத்திலேயே நடைபெறும்.

செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழு அதிகாரி ஒருவர் மேற்கண்ட தகவலைத் தெரிவித்தார்.

தவிர்க்க முடியாத காரணத்தினால் முன்னர் திட்டமிட்டபடி குறிப்பிட்ட திகதியில் நோயாளர் கப்பல் சேவை நடத்த முடியவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஒ-3

## தொழில் பதிவுச் சான்றிதழ் வழங்கும் நடவடிக்கை

யாழ்ப்பாணம், பருத்தித்துறை, சாவகச்சேரி ஆகிய உதவி அரச அதிபர் பிரிவுகளில் வாணிபம் மற்றும் தொழில் முயற்சிகளைப் பதிவு செய்ய விண்ணப்பித்தவர்களுக்கு பதிவுச் சான்றிதழ்கள் நாளை முதல் கந்தர்மடத்தில் அமைந்துள்ள விடுதலைப் புலிகளின் வருவாய்ப்பகுதி செயலகத்தில் வைத்து வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்குட்பட்டவர்களுக்கு நாளை செவ்வாய்க்கிழமையும் நாளை மறுதினம் புதன்கிழமையும்—

பருத்தித்துறை உதவி அரச அதிபர் பிரிவுக்குட்பட்டவர்களுக்கு எதிர்வரும் 15 ஆம் திகதி வெள்ளிக்கிழமையும்—

சாவகச்சேரி உதவி அரச அதிபர் பிரிவுக்குட்பட்டவர்களுக்கு 16 ஆம் திகதி சனிக்கிழமையும்— சான்றிதழ்கள் வழங்கப்படவிருக்கின்றன.

உரிமையாளர்களே நேரடியாகச் சமுகமளித்து சான்றிதழைப் பெறவேண்டும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-3)

## நூல் வெளியீடு

யாழ்ப்பாணம், ஜன. 11

கரவெட்டி ஞானாசாரியார் கல்லூரி ஆசிரியர் எஸ். இராமச்சந்திரன் எழுதிய ''சித்திரக் கைநூல்'' இன்று திங்கள் காலை 9 மணிக்கு வெளியிட்டு வைக்கப்படவுள்ளது. வெளியீட்டு விழா கல்லூரி மண்டபத்தில் ஓவியர் ரமணியின் தலைமையில் நடைபெறும்.

## உற்சவம்

கொழும்புத்துறை கிழக்கு ஆத்தியம்பதி அருள்மிகு ஸ்ரீ சந்திரசேகரர் விநாயகர் ஆலயத்தில் இன்று பிற்பகல் 3. 00 மணிக்கு கிருஷ்ணபக்க சதுர்த்தித் திருவிழா நடைபெறும் (உ-30)

## நாளை

யாழ்ப்பாணம், ஜன 11

யாழ்ப்பாண விஞ்ஞானச் சங்கம் நடத்தும் கல்லூரிகளுக்கு இடையிலான விஞ்ஞான வினா விடைப் போட்டி நாளை செவ்வாய்க்கிழமை இந்து மகளிர் கல்லூரியில் நடைபெற உள்ளது.

நாளை முழு நாளும் நடக்கவிருக்கும் இப் போட்டியில் மாவட்டத்தைச் சேர்ந்த பல பாடசாலைகளின் மாணவர்களும் பங்குபற்றுகின்றனர். இப் போட்டியினைப் பார்க்க விரும்பும் மாணவர்களும், ஆசிரியர்களும் அனுமதிக்கப்படுவர் என்று சங்கச் செயலாளர் பேராசிரியர் வி. க. கணேசலிங்கம் தெரிவித்தார்.

இப்போட்டியில் பரிசு பெறும் மாணவர்களுக்கு யாழ். விஞ்ஞான சங்கத்தின் வருடாந்த மாநாடு எதிர்வரும் ஏப்ரலில் நடைபெறும் போது பரிசுகள் வழங்கப்படும். (அ)

★ ★ ★

யாழ்ப்பாணம், ஜன. 1

சாவகச்சேரி கோட்டத்தைச் சேர்ந்த பகுதி நேர ஆங்கில ஆசிரியர்கள் உட்பட சகல ஆங்கில ஆசிரியர்களுக்குமான கருத்தரங்கு சாவகச்சேரி பெண்கள் கல்லூரியில் நாளை செவ்வாய்க்கிழமை நடைபெறும் என கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (ஒ)

## எய்ட்ஸ் பற்றிய கலந்துரையாடல்

யாழ்ப்பாணம். ஜன. 11

''எய்ட்ஸ் நோயின் பாதிப்பும், பாதுகாப்பும்'' என்னும் பொருளிலான கலந்துரையாடல் ஒன்று நாளை செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு திருநெல்வேலி கிழக்கு செங்குந்த இந்துக் கல்லூரியில் நடைபெறும்.

நல்லூர் லயன்ஸ் கழகம் ஒழுங்கு செய்துள்ள இக் கலந்துரையாடலில் யாழ் வைத்திய சுகாதார அதிகாரி டாக்டர் ஆர். தெய்வேந்திரன் உரைநிகழ்த்துவார். எய்ட்ஸ் நோய் பற்றிய படக்காட்சியும் இந்நிகழ்வில் இடம் பெறும் (க)

## வல்லைப்பாலம் திருத்தப்பட்டது

நெல்லியடி, ஜன. 11

கடந்த மாதம் இராணுவத்தினர் மேற்கொண்ட ஷெல் தாக்குதலினால் சேதமடைந்த வல்லைப்பாலம் தற்காலிகமாகத் திருத்தி முடிக்கப்பட்டுள்ளது (உ-109)

## மீட்பு நிதி சேகரிப்பு

யாழ்ப்பாணம், ஜன. 11

இதுவரை தமிழீழ மீட்பு நிதியைச் செலுத்தத் தவறியவர்கள் ஒவ்வொரு புதன், ஞாயிற்றுக்கிழமைகளிலும் நல்லூர் மங்கையர்க்கரசி வித்தியாலயத்தில் தமது மீட்பு நிதிக்கான கடனைச் செலுத்த வசதி செய்யப்பட்டுள்ளது.

புதன் பிற்பகல் 3 மணி தொடக்கம் 3. 30 மணி வரை வரையும், ஞாயிறு காலை 9. 30 மணி தொடக்கம் 10 மணி வரையும் மீட்பு நிதிக் கடனைச் செலுத்தலாம்.

## இரு வேங்கைகள் வீரமரணம்

மணலாறு கொக்குத்தொடுவாயில் நேற்று முன்தினம் இரவு விடுதலைப்புலிகளுக்கும், ஸ்ரீலங்காப் படையினருக்கும் இடையில் நடந்த திடீர் மோதலில் இரு போராளிகள் வீரமரணமடைந்தனர்

கப்டன் முத்துச்செல்வன் அல்லது ஆனந்தகுமார் (குஞ்சன் மதியழகன்-பூநகரி), லெப்டினன்ட் இளமாறன் அல்லது சூரியகுமார் (தேவராசா சதீஸ்வரன் - வல்வெட்டித்துறை) ஆகியோரே வீரமரணமடைந்தவர்கள் ஆவர். (ஒ-3)

## தீர்வு ஒன்றைத்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

தீர்வுத் திட்டம் ஒன்றுடன் இந்தப் பயணத்தை மேற்கொண்டிருப்பதாக கொழும்புத் தகவல்களை மேற்கோள் காட்டி உதயன் செய்தி வெளியிட்டிருந்தது அத்திட்டத்தை தெரிந்து கொள்ளலாமா?

ஆயர்: நான் தீர்வுத்திட்டம் எதனையும் கொண்டுவரவில்லை. சில சிந்தனைகளை என் தலையினுள் கொண்டு வந்து உள்ளேன் அவற்றை இங்கு உரியவர்களுடன் பேசவிருக்கின்றேன். அப்படிப் பேச்சுகள் இடம்பெற்றால் அது பற்றிய விவரங்களை 13ஆம் திகதி நடக்கும் செய்தியாளர் மாநாட்டில் வெளியிட உத்தேசித்துள்ளேன்.

### தெரிவுக்குழு

கேள்வி: இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணப்படும் என்ற நம்பிக்கை தங்களிடம் உண்டா?

ஆயர்: இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண நியமிக்கப்பட்டுள்ள நாடாளுமன்றத் தெரிவுக்குழு தீர்வு ஒன்றைக் கொண்டுவரும் என்று மிகுந்த நம்பிக்கை கொண்டுள்ளேன்.

கேள்வி: அத்தீர்வு தமிழர் அபிலாசைகளை உள்ளடக்கியதாக இருக்கும் என்று எண்ண முடியுமா?

ஆயர்: தமிழருடையதுடன் சிங்களவருடைய அபிலாசைகளையும் உள்ளடக்கியதாக இருக்கும்.

நாடாளுமன்றத் தெரிவுக் குழுவின் முன் நானும் மற்றத் தலைவர்களும் சாட்சியமளித்துள்ளோம். எமது பிரச்சினைக்கு உளப்பூர்வமாப் தீர்வுகாண விரும்பும் தலைவர்கள் நம்மத்தியில் இருப்பதை அப்போது தெளிவாக உணர்ந்தேன்.

கேள்வி: உங்களை அரசியலுக்குள் இழுக்க நான் விரும்பவில்லை. இருந்தும் இணைப்பை ரத்துச் செய்யும் கருத்துடன்பாடு பற்றிய அறிக்கை ஒன்றை நாடாளுமன்றத் தெரிவுக்குழு வெளியிட்டுள்ளதே!

ஆயர்; நாடாளுமன்றத் தெரிவுக் குழுவின் யோசனைகள் வெளிவரும் வரை பொறுத்து இருங்கள். (Wait for the Parliamentary Select Committe Proposals.)

கேள்வி; பேச்சுகள் தொடங்குவதற்கு முன்னர் யுத்த நிறுத்தம் கொண்டுவரப்பட வேண்டும் என்று கொழும்பு ஆங்கில வார இதழ் ஒன்றுக்கு பேட்டி அளித்திருந்தீர்கள். அது பற்றி தங்களின் கருத்து...

ஆயர்: நான் அப்படிக் கூறவில்லை. இரண்டாம் உலக மகாயுத்தம் நடந்து கொண்டிருக்கையில் பேச்சுவார்த்தைகளும் நடந்து கொண்டிருந்தன. இரண்டும் ஒரே சமயத்தில் நடக்க முடியும்.

கேள்வி: அப்படியானால் தைப்பொங்கலோடு யுத்த நிறுத்தம் என்பது பற்றி......

ஆயர்: யுத்த நிறுத்தம் தீர்வை நோக்கிய நடவடிக்கைகளுடன் வரவேண்டும் (Ceasefire should come with Step towards a solution Two should go together) இரண்டும் சேர்ந்தாற்போல் போக வேண்டும்

### கிளாலிப் பயணம்

கேள்வி: பலர் படுகொலையான சம்பவத்தை அடுத்து கிளாலி ஊடாக இராணுவ எச்சரிக்கையை உதாசீனம் செய்து, கடற்படையின் கண்காணிப்பை ஊடறுத்துக் கொண்டு யாழ்ப்பாணம் வந்துள்ளீர்கள். அதிவிரைவுப் படகில் நடுக்கடலில் உங்கள் மனம் என்ன நிலையில் இருந்தது?

ஆயர்: எது சரி, நான் என்ன செய்கின்றேன் என்பது எனக்குத் தெரிந்திருந்தது. என்னைப்பற்றி நான் பயப்படவில்லை ஆயர் ஒரு மேய்ப்பர். எனது மக்களைப் பார்ப்பது எனது தெளிவான கடமையாகும் இதற்காக எனது உயிரைப்பணயம் வைத்தே வந்தேன்

கேள்வி: கொழும்புப் பத்திரிகை ஒன்றுக்கு அளித்த பேட்டி ஒன்றில், யுத்தநிறுத்தம் ஒன்றைக் கொண்டு வருவதில் தீவிரமாக ஈடுபட்டுள்ளதாக நீங்கள் கூறியிருந்தீர்கள். இதில் காணப்பட்டுள்ள முன்னேற்றம் பற்றிக் கூறுவீர்களா?

ஆயர்: உலக திருச்சபைக் கவுன்ஸில் பாதிக்கப்பட்டவர்களுக்கு புனர்வாழ்வு அளிப்பதிலும் உதவி வழங்குவதிலும் தீவிரமாக ஈடுபட்டுள்ளது. பேச்சுவார்த்தை மூலம் சமாதானத்தைக் கொண்டு வரும் எந்த முயற்சிக்கும் உலக திருச்சபைக் கவுன்ஸில் ஆதரவளிக்கும் என்று எனக்குத் தெரியும்.

கேள்வி: கண்டபடி ஷெல் தாக்குதல் மற்றும் விமானக் குண்டு வீச்சுகள் நடைபெறுகின்றன. இதனைத் தடுத்து நிறுத்த தங்களின் நல்லெண்ணத்தைப் பயன்படுத்த முடியாதா?

ஆயர்: அப்பாவி மக்களின் உயிர்கள் பாதுகாக்கப்பட வேண்டும். சாதாரண மக்களுக்கு ஆபத்து ஏற்படுத்தக் கூடியதான நடவடிக்கைகள் இருக்கக் கூடாது. இராணுவ நடவடிக்கையில் ஈடுபட்டுள்ள அனைத்துத் தரப்பினருக்கும் நான் விடுக்கும் செய்தி இது தான்.

[illegible]

கேள்வி: [illegible]

இனப்பிரச்சினைத் தீர்வு பற்றி என்ன கருத்து நிலவுகிறது?

ஆயர்: தென் பகுதியில் சமாதானம் தேவை என்ற புதிய மனோபாவம், நம்பிக்கை பரவி வருகின்றது அண்மையில் ஜாஎல என்னும் இடத்தில் நடந்த அனைத்து சமயக் கூட்டத்தில் அமைதி வேண்டி பிரார்த்தனை செய்யப்பட்டது அப்படிப்பட்ட பிரார்த்தனை யாழ் குடாவிலும் இடம்பெறவேண்டும். நல்லை ஆதீன முதல்வரைச் சந்தித்தேன் சமாதானம் வேண்டும் என்றுதான் அவரும் கோரினார்.

கேள்வி: தென்பகுதி மக்களின் மனோபாவம் மாறியிருப்பதாகக் கூறினீர்கள் ஆட்சி பீடத்தில் இருப்பவர்களின் மனோபாவத்திலும் மாற்றத்தைக் கண்டுள்ளீர்களா?

ஆயர்: ஆம். கண்டுள்ளேன். நாடாளுமன்றத் தெரிவுக்குழுவில் நான் அதனை அவதானித்தேன். தெரிவுக் குழுவின் யோசனையை நம்பிக்கையோடு எதிர்பாருங்கள்

கேள்வி: சமாதானம் ஏற்படும் வாய்ப்பு உண்டா?

ஆயர்: அரசியல்வாதிகள் மற்றும் இராணுவத்தினரிடம் விடமுடியாத அளவுக்கு சமாதானம் முக்கியத்துவம் வாய்ந்ததாக உள்ளது.

சமாதானம் இல்லாததால் சாதாரண மக்கள் தான், துன்பப்படுகின்றனர். நாட்டில் உள்ள அனைவரும் சமாதானம் வேண்டியும் பேச்சு மூலம் தீர்வு காணும்படியும் வலியுறுத்த வேண்டும்.

கேள்வி; இலங்கையின் எதிர்காலம் எப்படி அமையும் என்று நினைக்கிறீர்கள்?

ஆயர்: ஐக்கியமான ஒரு நாடாக இருக்கும்வரை இலங்கைக்கு நல்ல எதிர்காலம் உண்டு இதனை சிங்கள மக்களும் தமிழ் மக்களும் உணர்ந்து நாட்டின் ஐக்கியத்தைப் பாதுகாக்கவேண்டும்.

கேள்வி: இம்முறை பொங்கல், மிகச் செலவான பொங்கலாக அமைய உள்ளது. அந்த அளவுக்கு அத்தியாவசியப் பொருள்களின் விலைகள் உயர்ந்துள்ளன. விலைகள் குறையும் வாய்ப்பு ஏற்பட உதவி செய்ய முடியுமா?

ஆயர்: நான்கு தினங்களே பொங்கலுக்கு உள்ளன. அதற்கு இடையில் விலைவாசி குறைய உதவுவது சாத்தியமில்லாத காரியமாகும்.

நல்லை ஆதீன குருமகா சந்நிதானம் அவர்களைச் சந்தித்தேன். ஆலயப் பூசை வழிபாடுகளுக்குரிய பூசைப் பொருள்களுக்கே தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாக சுவாமிகள் கூறினார். எனக்குப் பெரும் வருத்தமாக இருந்தது ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### போரில் உடனுக்குடன் கட்டளைப் பிறப்பிக்க

# கூட்டுப்படைத் தலைமையகம் அ'புரவுக்கு விரைவில் மாற்றம்

கொழும்பு, ஜன. 11

ஸ்ரீலங்கா கூட்டுப்படைத் தலைமையகம் கொழும்பில் இருந்து அனுராதபுரத்துக்கு விரைவில் மாற்றம் செய்யப் படவிருப்பதாக அறிவிக்கப் பட்டுள்ளது.

கடற்படை, தரைப்படை, விமானப்படை, பொலீஸ், துணை இராணுவப்படை ஆகிய அனைத்துப் பிரிவுகளையும் உள்ளடக்கிய கூட்டுப் படைத் தலைமை அலுவலகமே அனுராதபுரத்துக்கு மாற்றப் டுகிறது.

இதன் மூலம் உற்சமயம் பின்னைவுகள் மூலம் மன வலிமை குறைந்துள்ள படையினருக்கு புதிய தெம்பையும் — உற்சாகத்தையும் ஏற்படுத் தலாம் என்று பாதுகாப்புத் துறை கருதுவதாகத் தெரிவிக்கப்பட்டது.

கொழும்பில் இது வரை பணிபுரிந்து வரும் கூட்டுப் படைத் தளகர்த்தர் ஜெனரல் ஹமில்டன் வனசிங்கா இனிமேல் அனுராதபுரத்தில் இருந்து பணிபுரிவர் என்றும் —

தலைமை அலுவலகம் இடமாற்றம் செய்யப்படுவதன் மூலம் போரில் உடனுக்குடன் கட்டளை பிறப்பிப்பது எளிதாக இருக்கும் என்றும் இராணுவம் கருதுகிறது.

கொழும்பிலிருந்த கூட்டுப் படைகள் தலைமையகம் 1991 ஆம் ஆண்டு ஜூன் 21 ஆம் திகதி விடுதலைப் புலிகளின் வெடிகுண்டுத் தாக்குதலுக்கு இலக்காகி தகர்ந்தது தெரிந்ததே.

## மரண அறிவித்தல்கள்

### சின்னத்துரை

ஆனைக்கோட்டையைச் சேர்ந்த சின்னத்துரை 09-01-93 அன்று காலமானார்.

இவர் கனகம்மாவின் அன்புக் கணவரும், சிவராசா, மஞ்சுளா, விஜிதா, மாலினி, யோகதாஸ் (எல்லோரும் பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

10-01-93 அன்று காலை 11.00 மணிக்கு நடைபெற்ற அன்னாரின் மரணச் சடங்கில் கலந்துகொண்டு, உதவிகள் புரிந்த அனைவருக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம்

தகவல்:

வித்துவான் : வ. கந்தையா

(சந்திரன் தயாநிதி பெறாமகன்)

— சந்திரா ஸ்ரோர்ஸ் —

லட்சுமி பவனம்

கேணியடி ஒழுங்கை,

கொச்சுவில் மேற்கு,

கொக்குவில்.

[24022]

### செல்லையா கதிரவேல்

குப்பிளானைச் சேர்ந்த ஓளைப்பாறிய அதிபர் செல்லையா கதிரவேல் அவர்கள் 10 - 01 - 93 ஞாயிறு சிவபதம் அடைந்து விட்டார்.

இவர் இராஜேஸ்வரியின் அன்புக் கணவரும் திரு. செ. அப்புத்துரையின் அன்புச் சகோதரரும் திருமதி சு. குலமணிதேவி, காலஞ்சென்ற சண்முகானந்தன், நித்தியானந்தன் (கிராம சேவையாளர்), திருமதி சி. சோதிமணி, காலஞ்சென்ற சுத்தானந்தன், சிவானந்தன் (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தந்தையும், திரு ஆ. சுப்பிரமணியம் (பரீட்சைத் திணைக்களம், கொழும்பு) திருமதி நி. அன்னலட்சுமி (கிளி). திரு. செ. சிவதாசன் ஆகியோரின் அன்பு மாமனாரும், சுபத்திரா, சந்திரிகா, சுதர்சன், சர்மினி, தயாளினி, லோகானந்தன், ஜெயந்தா, லோஜீ, ரஜனி, மதன், சக்தி ஆகியோரின் அன்புப் பேரனுமாவர்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று 11 - 01 - 93 குப்பிளானில் நடைபெற்று பூதவுடல் பி. ப. 2 00 மணியளவில் குப்பிளான் மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

தகவல்:

க. நித்தியானந்தன்

(மகன்)

கிராம சேவையாளர்,

யாழ் நகர் J/73

(24014)

### சோமசுந்தரம்பிள்ளை தியாகராஜபிள்ளை

சுரம்பனைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் தற்போது சபாபதி வீதி, கொக்குவில் கிழக்கை வசிப்பிடமாகக் கொண்டவருமாகிய பண்டிதர் சோ. தியாகராஜபிள்ளை அவர்கள் (ஓய்வு பெற்ற விதானையாரும், ஆசிரியரும்) 10-01-1993 நேற்றுக் காலமாகிவிட்டார்.

இவர் திருமகளின் அன்புக் கணவரும், திரியம்பகி (பிரான்ஸ்), பத்மநயனி, பிரதாயினி (பிரான்ஸ்), சுதர்ஜனதேவி, குமார் ஆகியோரின் அருமைத் தந்தையும், பாலகிருஷ்ணனின் அன்பு மாமனாரும், சிவஞானவதி, காலஞ்சென்ற தையல்நாயகி, சிவபாதசுந்தரம், (லண்டன்), பெரியநாயகி ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்ற கமலநாதன், செந்தில்நாதன் (லண்டன்) ஆகியோரின் அன்பு மைத்துனரும், ஆனந்த், அனுஷியா ஆகியோரின் அருமைப் பேரனும் ஆவார்.

ஈமக்கிரியைகள் பற்றிய தகவல் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்;

திருமதி திருமகள் தியாகராஜபிள்ளை

(மனைவி)

45, சபாபதி வீதி,

கொக்குவில்.

(24026)

### சமாதான...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

லைச் சீர் செய்ய கொழும்பு சென்றதும் முயற்சி எடுப்பேன்.'' — என்றார்.

அங்கிலிக்கன் திருச்சபை ஆயர் நேற்று நடைபெற்ற பேச்சுக்களை அடுத்து கொழும்பு திரும்பி, அங்கு இது விடயமாக மேல் நடவடிக்கை எடுப்பார் என்றும் —

இவ்விவகாரம் குறித்து அவர் கொழும்பில் பேச்சு நடத்திவிட்டு மீண்டும் இங்கு வந்து பேச்சுக்களைத் தொடர வாய்ப்பு இருப்பதாகவும் அங்கிலிக்கன் திருச்சபை வட்டாரங்களில் இருந்து தெரிய வந்தது. (உ-3)

### குடாநாட்டில்...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

டத்தரிப்பு மற்றும் வயாவிளான், புன்னாலைக்கட்டுவன், ஏழாலைப் பகுதிகளையும் சீ-பிளேன் அவதானித்துச் சென்றதாகவும் தெரிவிக்கப்பட்டது.

சீ-பிளேன் பரவலாகச் சுற்றி நோட்டமிட்டதால் மக்கள் மத்தியில் பீதி நிலவுகிறது திடீரென விமானக் குண்டுவீச்சு ஏதும் நிகழலாம் என மக்கள் பேசிக் கொண்டனர். (ஒ-3-51-111-117-15)

### யாழ் நகரில்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

குடாநாட்டிலிருந்து அணிதிரளும் மக்கள் இன்று காலை எட்டு மணி தொடக்கம் நல்லூர் கந்தசாமி கோவில் வீதியில் கூடுவர். அங்கிருந்து பேரணியும், வாகன அணியும் காலை பத்து மணிக்கு யாழ். செயலகம் நோக்கிப் புறப்படும் பேரணி கோவில் வீதி வழியாகச் செல்லும்.

இன்றைய பேரணியில் சகல துறைகளையும் சேர்ந்த மக்கள் கலந்து கொள்கின்றனர்.

பேரணியை முன்னிட்டு அதனை ஒழுங்கு செய்துள்ள தமிழீழ வெகுஜன அமைப்புகளின் ஒன்றியம் வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றில்—

பேரினவாத ஸ்ரீலங்கா அரசின் போர் தொடர்கிறது. அது தமிழர்களைப் பட்டினி போட்டுச் சாகடிக்க முனைகிறது. ஆனால் அரசுக்குத் தக்க பதிலடி கொடுக்க சகல தமிழீழ மக்களும் தயாராகி விட்டனர்—

#### ஆயர் எடுத்துக் கூறவேண்டும்

எமது வாழ் நிலையை நாமே தீர்மானிக்கும் வரலாற்றுக் கட்டத்தை அண்மித்து விட்டோம்—

அடக்குமுறைக்கு எதிராகப் போராடும் மக்களுக்கு சர்வதேச சமூகம் நீதி வழங்கட்டும்—

ஸ்ரீலங்கா அரசு செய்து வரும் கொடுமைகளை இப்போது யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்திருக்கும் அங்கிலிக்கன் திருச்சபை ஆயர் அதி. வண. கென்னத் பெர்னாண்டோ சர்வதேச சமூகத்துக்கு எடுத்துச்சொல்ல வேண்டும் [illegible] உள்ளது. (அ-3-15)

## அடுத்த தடவை காரில் மனைவியுடன் வருவேன்!

## ஆயர் கென்னத் நம்பிக்கை

யாழ்ப்பாணம், ஜன. 11

''அடுத்த தடவை யாழ்ப்பாணம் வரும்போது எனது மனைவியுடன் காரில் இங்கு வருவேன்.''

—இப்படி நம்பிக்கை வெளியிட்டார் அங்கிலிக்கன் திருச்சபை ஆயர் அதி. வண. கென்னத் பெர்னாண்டோ

சுண்டுக்குளி சென். ஜோன்ஸ் தேவாலயத்தில் நேற்றுக் காலை அவர் நடத்திய ஆராதனை வைபவத்தின் முடிவில் உரையாற்றுகையிலேயே ஆயர் மேற்கண்டவாறு நம்பிக்கை வெளியிட்டார்.

அவர் அங்கு மேலும் கூறியதாவது:-

ஆயராகப் பதவி ஏற்றவுடன் இங்கு வரவேண்டும் என்று முடிவு செய்தேன். ஆனால் சில இடர்கள் காரணமாக ஒரு மாதம் தாமதிக்க வேண்டியதாயிற்று.

இரு விடயங்களுக்காக மன்னிப்புக் கோருகிறேன். ஒன்று மனைவியை அழைத்து வராமை. மற்றையது தமிழில் பேசமுடியாதுள்ளமை.

ஒவ்வொரு வருடமும் இங்கு வந்து ஒரு வாரம் தங்கி, உங்கள் இன்னல்களை நானும் பகிரவிருக்கிறேன் அடுத்த தடவை காரில், தமிழ் பேசக் கூடிய எனது மனைவியுடன் இங்கு வருவேன்

கொழும்பு திரும்பியதும் உங்கள் அவலங்களை — இன்னல்களை அங்குள்ள தலைவர்களுக்கும், சிங்கள மக்களுக்கும் தெரிவித்து சமாதான சூழ்நிலையை ஏற்படுத்த எனது முழுச்சக்தியையும் செலவிடுவேன்.

இஸ்ரேலியர்கள் பாபிலோனியா என்னும் அந்நிய நாட்டில் சிறைவைக்கப்பட்ட போது தமது கடவுள் நம்பிக்கையை கைவிட்டனர். ஆனால் நீங்கள் சொந்த நாட்டிலேயே அந்நிய தேசமக்கள் போன்று மதிக்கப்பட்ட போதும், கடவுளை வணங்குகிறீர்கள்; ஆடம்பரமற்று, அமைதியாக வாழ்கிறீர்கள். இந்த நிலையை தொடர்ந்து கடைப்பிடிக்க வேண்டும். உங்களுக்கு நிச்சயம் விடிவு வரும்'' — என்றார்.

டாக்டர் ஜெயகுலராஜா தலைமை வகித்துப் பேசுகையில்—

''நீங்கள் (ஆயர்) இங்கு வரும்போது கிளாலிக் கடல் வழியே வந்தீர்கள். அப்போது அந்தக் கடல் நீல நிறமாக இருந்திருக்கும். ஆனால் நீங்கள் வருவதற்கு சில நாட்களுக்கு முன் அக்கடல் சிவப்பாக — செங்கடலாக — இருந்தது'' என்றார்

(ஓ-3)

### கிறிஸ்தவ..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

சியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கம், கடற்புலிகளின் விசேட தளபதி திரு. சூசை, யாழ். மாவட்ட விசேட தளபதி தமிழ்ச்செல்வன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

நேற்று மாலை 7.00 மணிக்கு ஆரம்பமான சந்திப்பு இரவு 9.30 மணிவரை நீடித்தது.

அரசின் பொருளாதாரத் தடையால் குடாநாட்டில் எழுந்துள்ள நெருக்கடி நிலை, மக்கள் அனுபவிக்கும் கஷ்டங்கள், அவர்களின் போக்குவரத்துப் பிரச்சினைகள் ஆகியவை குறித்து இந்தச் சந்திப்பின்போது முக்கியமாகப் பேசப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது

இந்தச் சந்திப்பின் பின்னர் தலைவர் பிரபாகரன் அங்கிலிக்கன் திருச்சபை ஆயருடனும் மற்றைய ஆயர்களுடனும் தனித்தனியாகச் சந்தித்துப் பேசினார். (உ-3)

## மரண அறிவித்தல்

### திருமதி சோ. சின்னத்தங்கம்

வேலணை கிழக்கைப் பிறப்பிடமாகவும் ஆனைப்பந்தியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சோ. சின்னத்தங்கம் நேற்றுக் காலமானார்.

இவர் காலஞ்சென்ற சி. சோமசுந்தரத்தின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற நாகபூரணி, சண்முகரத்தினம் (ஓய்வுபெற்ற ஆசிரியர், நாவலர் பாடசாலை), அமிர்தலிங்கம் (ஓய்வுபெற்ற ஆசிரியர், மானிப்பாய் மகளிர் கல்லூரி), மகேஸ்வரி, ஜீவரட்ணம் ஆகியோரின் அன்புத் தாயாரும் காலஞ்சென்ற மார்க்கண்டு, விஜயலட்சுமி, ஞானாம்பிகையம்மாள் (ஓய்வுபெற்ற ஆசிரியை, கட்டுடை சைவ வித்தியாசாலை), துரைராசா (C. T. B கோண்டாவில்) நாகேஸ்வரி ஆகியோரின் அன்பு மாமியாரும்—

மாணிக்கசிங்கம் (துர்க்கா ரெக்ஸ், யாழ்ப்பாணம்), பாலசிங்கம் (U. K), திருமதி தனலட்சுமி (U. K), மா. வினாயகமூர்த்தி (அப்பு), திருமதி யோகலட்சுமி (U.K), திருமதி ஜெயசுந்தரி (U. K), செல்வி ஜெயதேவி ஜெயதேவன் (U. K), திருமதி ஜெயக்குமாரி (U. K), திருமதி ஜெயராணி, திருமதி ஜெயகௌரி (U. K), செல்வி ஜெயரூபி (ஆசிரியை, நாவலப்பிட்டி கதிரேசன் கல்லூரி),

செல்வி ஜெயரதி (U. K), ஜெயக்குமார் (பேராதனை பல்கலைக்கழகம்), செல்வி ஜெயரஞ்சினி, விபுலானந்தன் (U. K), திருமதி சாந்தினி (U. K), திருமதி றோகினி (U. K), அனுசீலன் (U. K), ஜெயசீலன் (U. K), பாஸ்கரன் (பிரான்ஸ்), பிரபாகரன் (U. K), கிருபாகரன் (மாணவன். கொக்குவில் இந்துக் கல்லூரி), யாழினி (யாழ். இந்து மகளிர் கல்லூரி) ஆகியோரின் அன்புப் பேத்தியும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று திங்கட்கிழமை பி. ப. 3மணிக்கு ஆனைப்பந்தியடியில் உள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பையன் மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர். நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:

சோ. சண்முகரத்தினம்

(மகன்)

122/.0, பருத்தித்துறை வீதி,

ஆனைப்பந்தி சந்தி,

யாழ்ப்பாணம்.

(24027)

இப் பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 29?/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 11-01-1993 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org